159

Reg. No. M. 1534.

R. C. Training School Magazine, Trichinopoly.

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதன விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 18.	மார்ச்சு 1929.	மலர் 9.

THE REGISTRAR OF BOOKS MADRAS
6 APR 1929

JL
N11PP
N29.18.9.
18228

ந்திராதிபர் குறிப்புகள்..

ல் எப்பாடசாலையிலும் போதனமுறை
க் குறைந்த பேர்தான் சேர்த்துக்
ானத் தோன்றுகிறது.

*** ***

பெண்பிள்ளைகள் பாடசாலைகளில் லோவர் கிரேடு எடுப்பதை நிறுத்த வழி கூறப்பட்டுவருகிறது.

* * *

கடந்த வருஷங்களில் எலொக்கியூஷன் பரீட்சையில் தவறியவர்கள் இவ்வருஷம் அதில் தேறினால்தான் செர்டிபிக்கேட் பெறக்கூடுமென்று தெரிகிறது. இவ்வருஷம் பரீட்சை எழுதுபவர்களுக்கு எலொக்கியூஷனில் பரீட்சை கிடையாதென்று முன்னமேயே தெரிவித்திருக்கிறது.

திருச்சினாப்பள்ளி

திருக்குடும்பப் போதனாமுறைப் பாடசாலைச்சங்கத்தின் 18-ம் ஆண்டு ரிப்போர்ட்டு.

இப்பாடசாலைச்சங்கத்தின் வழக்கப்படி கடந்த 17 வருஷங்களாக அவ்வவ்வருஷத்தின் இறுதியிலும் இப்போதனாமுறைப் பாடசாலைச் சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம் நிகழ்வுற்று வந்ததுபோல் இவ்வாண்டிலும் இன்று (பெப்ரவரி-௴ 15-ம் தேதி) நமது சென்னை மாகாண முதல் மந்திரியார் மகா கனம் டாக்டர் P. சுப்பராயன் அவர்களது அக்கிராசனத்தின்கீழ் எங்கள் பள்ளிக்கூட சங்க 18-ம் வருஷாந்தர விழா வைபவம் நிகழ்வுறுகின்றது.

இந்நிறைவிழா பிரதிவருஷமும் வளர்பிறைச் சந்திரனைப்போல் நிறைந்தோங்கி வருவதால் இவ்வருஷத்திலும் நன்னயச் சிறப்போடு கொண்டாட யாங்கள் முன் வந்துள்ளோம். ஏனெனில் இச்சங்கம் எங்களுக்கு பற்பல பலனை விளைவித்ததுடன் எங்களது தற்கால பிற்கால ஜீவியத்திற்கு இது ஓர் தீபம்போல் அநேக அரும் பெரும் விஷயங்களைக் காட்டக் காரணமாயிருந்தது.

நிற்க, இச்சங்கமானது அங்கத்தினரின் ஆரவாரக் கொண்டாட்டத்திலும், செல்வப் பெருமையிலும் அடங்கியதல்ல. ஆனால் அநேகர் உள்ளங்களில் ஆழமாய்ப் புதைந்து கிடக்கும் நல்விஷயங்களைப் பிறருக்குப் பயன்படுமாறு எடுத்துரைத்து விளக்குவதும், இலௌகிக வைதிக அறிவைப் பெருக்குவதும், சொற்றிறமை, சுயநலப் பரித்தியாகஞ் செய்தல், பிறர்சிநேகத்தில் ஈடுபட்டு உழைத்தல் முதலிய பொது ஜனசமூக நன்மைகளைப் பயக்குவதுமாகிய சிறந்த நன்னோக்கங்களைக்கொண்டு நடைபெறுவதாம்.

கடந்த ஆண்டின் வருஷாந்தரக் கொண்டாட்டம் திருச்சி முனிசிபல் சேர்மனுயிருந்தவரும், தற்காலம் ஜில்லா போர்டு தலைவராய் இருக்கிறவருமான ஸ்ரீமான் T. M. நாராயணசாமி பிள்ளை அவர்கள், M. A., B. L., M. L. C. அக்கிராசனம் வகிக்க மாணவர்களிற் சிலர் தங்கள் கல்வித் திறமையைக் காட்டத்தக்க தான உபந்நியாசஞ் செய்தல், வியாசம் வாசித்தல், செய்யுள் ஒப்பித்தல் முதலிய காரியங்களில் ஈடுபட்டனர். திறமை வாய்ந்தோருக்கு வெகுமதியளிக்கப்பட்டது.

சங்கக் கூட்டங்கள் :—கடந்த ஓர் ஆண்டில் நடந்தேறிய கூட்டங்கள் 23. இவற்றுள் பொது உபந்நியாசங்கள் 9-ம், தமிழ்ப் பாட சம்பந்தமாய் 5-ம், தேம்பாவணி செய்யுள் வியாக்கியானம் 2-ம், கல்வி மேன்மையைப்பற்றி 1-ம், பொது அறிவு சம்பந்தமாயுள்ளது 5-ம், நல்லொழுக்க சம்பந்தமாய் 1-ம் நடந்தேறின. இவ்வுபந்நியாசங்கள் பெரும்பாலும் எங்களாலேயே செய்யப்பட்டு, எங்களைப் பயிற்றுவிக்கும் பக்ஷமும் அநுபவமும் வாய்ந்த ஆசிரியர்களே அக்கிராசனம் வகிக்க நிறைவேறின. அவர்களும் நாங்களும் ஒத்துழைத்தோமெனினும் வகுப்புப் பாடங்களைப்போலல்லாமல் இச்சங்கத்தின் விஷயங்கள் எங்கள் பொது அறிவை விருத்தி செய்யவும், அவையின்கண் அச்சம் கூச்சமின்றி திருத்தமாய்ப் பேசும் ஆற்றலை உண்டுபண்ணவும் உதவின.

வாசகசாலை :—சென்ற ஆண்டுகளைப்போன்றே ‘சுதேசமித்திரன், சர்வவியாபி, ஆரோக்கிய தீபிகை, சேசுவின் திரு இருதயத் தூதன், சத்திய நேசன், Educational Review, Indian Review, Modern Review, Village Teachers' Journal, Indian Educator, Teaching முதலிய 16 வகையான பத்திரிகைகள் எங்கள் பாடசாலைக்குத் தருவிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட காலங்களில் யாம் ஒழுங்குப்படி அங்கு சென்று ஷை பத்திரிகைகளை வாசித்து வருவதுடன், புஸ்தகசாலையிலிருந்தும் பல புஸ்தகங்களை எடுத்துப் பிரயோகித்து எங்கள் அறிவை விருத்தி செய்துகொள்ளுகிறோம். இன்னும் இச்சங்கத்தின் ஆதரவினுலே பழைய, புதிய மாணவர்களுக்குப் பயன்படுமாறு பிரதிமாதமும் ‘பூங்கொத்து’ என்னும் பத்திரிகையும் பிரசுரிக்கப்படுகிறது.

மேலும் இச்சங்கம் மேலான ஜீவியமாகிய மற்றுமோர் சிறந்த கூட்டத்துடன் ஒன்றிக்கப்பட்டிருக்கிறது. இதன் முக்கிய நோக்கம் பிறர்சிநேக ஊழியத்தில் உழைப்பதேயாகும். இது வெளி நோக்கத்தைச் சார்ந்ததல்லவெனினும், இதன் கருத்து எவ்வளவுக்கெவ்வளவு ஒவ்வொருவர் மனதிலும் ஆழ்ந்து பதிகிறதோ அவ்

18228

வளவுக்கவ்வளவு அதன் உழைப்பு வெளிப்படையாகவுந் தோன்றும். இதனுல் நாளாவட்டத்தில் பரோபகார ஆவலும், இதற்கு ஆதாரமாகிய கௌரவச் சிந்தையும் அங்கத்தினரிடம் அதிகரித்து, அவர்களிடத்தில் பிரமாணிக்கம், ஊழியம் என்னும் நற்குணங்கள் விளங்கிப் பலனளிக்குமென்று நம்ப இடமுண்டு. இம்மேலான உற்சாகம் அதிகரிக்கும்படி இச்சங்கம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் 'கல்விப்பயிற்சிப் பகுதி' ஒன்றாகும். மேலும் இச்சங்கத்தை ஹையர் கிரேட், லோவர் கிரேட் என்ற இரு கிளைச்சங்கங்களாகப் பிரித்து, அதிலும் பிறர்சிநேக விஷயமாய்த் தங்களுக்குத் தெரிந்த காரியாதிகளைப் பிறருக்கு எடுத்துக்கூறி வெகுவாய் உழைத்து வருகின்றோம். அங்ஙனமே ஜூனிய மாணவர்களும் இச்சங்கத்தைச் சோரவிடாமல் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் நடத்தி, நாளுக்குநாள் சகலத்திலும் விருத்தியடைவார்களென்னும் நம்பிக்கையோடு எமது ரிப்போர்ட்டை முடிக்கிறோம்.

இறுதியாக, இச்சங்கத்தின் முழுப்பயனையும் நாங்கள் அடையும்வண்ணம் எங்களுக்காக உழைத்துவரும் எம் தலைமை ஆசிரியரவர்களுக்கும், ஏனைய ஆசிரியரனைவோருக்கும் எம்மனமுவந்த நன்றியறிதலை முழுமனதுடன் செலுத்துகின்றோம். மற்றும் தங்களுக்குள்ள பல அலுவல்களின் மத்தியில் இன்று இவ்விழாவிற்கு அக்கிராசனம் வகிக்க நேரம் கண்டுபிடித்த கனந்தங்கிய சபாநாயகர் பிரதம மந்திரியாரவர்களுக்கும், இவ்வைபவத்தைக் கனப்படுத்த வந்துள்ள ஏனைய கனதனவான்களுக்கும், சீமாட்டிகளுக்கும் எம் மனமார்ந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,

(Sd.) **சங். R. ஞானப்பிரகாச சுவாமிகள், சே. ச.,**
சங்கம் நடத்துபவர்.

திருச்சினுப்பள்ளி,
15-2-1929.

தலைவர்: S. சூசைமாணிக்கம்.
காரியதரிசி: A. வியாகப்பன்.

சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

திருச்சினுப்பள்ளி திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலைச்சங்கத்தின் 18-ம் ஆண்டு நிறைவிழா.

இப்பாடசாலைச் சங்கத்தின் 18-ம் ஆண்டின் நிறைவிழா 15-2-29-ல் நமது மாகாண முதல் மந்திரியாரான மகா கனம் டாக்டர் P. சுப்பராயன், M.A., D.C.L., LL.D. அவர்கள் அக்கிராசனம் வகிக்க சிறப்புடன் இனிது நடையுற்றது. அன்றையத் தினம் இப்போதனுமுறைப் பாடசாலையின்கண் சுமார் 48 பாடசாலைகளிலிருந்து வந்திருந்த ஏறக்குறைய 1200 கல்வி, கைவேலை சம்பந்தமான பொருள்கள் அடங்கிய அழகிய கண்காக்ஷிசாலையும் அன்னவரால் திறந்துவைக்கப்பட்டது. அன்னவரும் அக்கண்காக்ஷிசாலையின்கண் அமைக்கப்பட்டிருந்த அரிய பொருட்களைச் சுற்றிப்பார்த்து அகமகிழ்ந்தனர். பின்னர் வருஷக் கொண்டாட்டம் துவக்கினது.

அன்று இவ்விழாவைச் சிறப்பிக்க விஜயம் செய்திருந்த பெரியவர்களுள் முக்கியமானவர்கள்: ஜில்லா கலெக்டர், ஜில்லா ஜட்ஜ், ஜில்லா கல்வித்தலைவர், ஜில்லா போர்டு தலைவர், திருச்சி சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரம்மாள், மின்னும்பள்ளி ஜமீன்தார் அவர்கள், திருச்சி முனிஸிபல் சங்கத்தலைவர், திருச்சி தாலுகா போர்டு தலைவர், ஸ்ரீமான் திரு. அற்புதசாமி உடையார், M.L.C., திருச்சி சர்க்கார் போதனுமுறைப் பாடசாலைத் தலைவர், பிஷப் ஹீபர் கல்லூரி ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர், உபாத்தியாயினிகளான கன்னியாஸ்திரிமார்கள், சர்க்கார் போதனுமுறைப் பாடசாலை ஆசிரிய மாணவர்களும் மற்றும் சில சீமாட்டிகளும் கனவான்களுமாவர்.

முதலில் D. பிலோமின் லேயோன், S. S. இருதயம், கபிரியேல் தாமஸ் என்னும் மாணவர்கள் கேட்போர் ஆனந்திக்குமாறு இனிய வரவேற்பு சங்கீதம் பாடவும், எமது பாடசாலைத் தலைமை ஆசிரியரும் எங்கள் சங்கத்தை வெகுவாய்ப் பரிபாலித்து நடத்தும் தலைவருமான சங்கைக்குரிய R. ஞானப்பிரகாச சுவாமியவர்கள் அக்கிராசனம் வகித்திருந்த கனம் மந்திரியாரவர்களுக்கு வரவேற்புப் பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தார்கள்.

அப்பால், "கிராம முன்னேற்றமும், ஆரம்பக் கல்வியும்" என்பதைப்பற்றி வியாசம் எழுதினவர்களான K. S. மிக்கேல், K. V. ராதாகிருஷ்ணன் இவர்களுக்கும், "ஆரம்பப் பாடசாலையும் தேகப்பயிற்சியும்" என்ற விஷயத்தை உபந்நியாசித்த மரிய பிலவேந்திரம், S. பொன்னுசாமி இவர்களுக்கும், இனிய குரலுடன் செய்யுள் ஒப்பித்த நடேசன், ஜேம்ஸ் பால்ராஜ் இவர்களுக்கும், தக்க வெகுமானங்கள் கனம் அக்கிராசனரவர்களால் அளிக்கப் பட்டதும், சங்கத்தின் காரியதரிசி, சங்கத்தின் 18-ம் வருஷத்திய ரிப்போர்ட்டு வாசித்து முடிக்க கனம் அக்கிராசனரவர்கள் பலத்த கரகோஷத்தினிடை எழுந்திருந்து தமது அக்கிராசன சொற்பொழிவுரையை நிகழ்த்தினர்.

இறுதியாய், எமது பாடசாலை முதல் உதவி ஆசிரியராகிய ஸ்ரீமான் T. S. கணபதி ஐயரவர்கள், அக்கிராசனரவர்களுக்கும், மற்றும் விஜயம் செய்திருந்த ஏனைய கனதனவான்களுக்கும், சீமாட்டிகளுக்கும் சங்கத்தின் சார்பாக தமது மனமுவந்த நன்றியைச் செலுத்தியபின், ராஜ வாழ்த்துப் பாடி கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

K. S. மிக்கேல்,
சங்கக் காரியதரிசி,
ஆர். ஸி. போதனாமுறைப் பாடசாலை,
திருச்சினாப்பள்ளி.

கேண்மை அல்லது நட்பு.

கேண்மை:—மானிடராகிய நாம் ஒருவருக்கொருவர் மனத்தாலும், வசனத்தாலும், செய்கையாலும், வேறுபாடின்றி ஒருமித்திருப்பதே நட்பெனப்படும். ஒருவன் அநேகரை அறிந்திருக்கலாம். அதனால் அவர்கள் நட்பாளராகமாட்டார்கள். ஆனால் ஒருவன் தன்னுடைய காரியசித்தியை உத்தேசம்பண்ணி நட்பாளனாகலாம். அவன்

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு"

என்ற ஆன்றோர் வாக்கின்படி நட்பிற்குப் பாத்திரனாகமாட்டான். எப்படியென்றால்,

"அற்ற குளத்தில் அருநீர் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறவார் உறவு"

என்ற மூதோர் வாக்கின்படி சிநேகிதனுக்கு வரும் இன்பத்தையும் துன்பத்தையும், வாழ்வையும், தாழ்வையும், சமபாகமாகப் பாவித்து அதனால் ஏற்படும் பலாபலன்களை ஏற்றுக்கொள்பவரே நட்பாளராவார்.

நட்பின் வகை:—மூன்று. அவைகளாவன: (1) உத்தமம், (2) மத்திமம், (3) அதமம்.

திருஷ்டாந்தம்.

(1) **உத்தம நட்பு:**—கங்கை, காவேரி, யமுனை முதலிய சுத்த நதிகளில் போய்ச்சேர்ந்த மழைநீரானது "பூவோடு சேர்ந்த நாறும் மணம்பெறுவதுபோல்" தானும் நற்கீர்த்தியை அடைந்து பலரும் தன்னை விரும்பும்படி மேன்மையான பெயர் பெறுகிறது. அதுபோல உத்தம நட்பாளர் இருவர் கூடின் அவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் மேன்மையான பெயர் பெறுவதுடன் யாவரும் நகைமுகங்கொண்டு ஏற்றுக்கொள்வார்கள்.

(2) **மத்திம நட்பு:**—சாதாரணமான ஆறுகளில் அல்லது ஓடைகளில் அதே மழை நீரானது போய்ச்சேரின் ஆற்றுநீர் அல்லது ஓடை நீர் என்று பெயர் பெறுகிறதேயன்றி விசேஷ நதியெனப் பெயர் பெறுகிறதில்லை. அதுபோல மத்திம நட்பாளர் இருவர் நட்பாளராய்த் தோன்றினும் அவ்வளவு மேன்மை பெறுகிறதில்லை. அவர்கள் நட்பும் நீடித்திருக்கமாட்டாது.

(3) **அதம நட்பு:**—சாக்கடைகளில் விழுந்த நீரானது எப்படி ஒருவருக்கும் நல்வழியில் பிரயோஜனமின்றி கழிவுநீரோடு சேர்ந்து ஊரைவிட்டு அப்புறப்படுத்தப்படுகிறதோ அதேமாதிரி அதம நட்பாளரைக் கண்ட யாவரும் வெறுப்பதன்றி அவர்களுடைய நட்பும், நீர்மேற் குமிழிபோல் உடனே மறைந்து வேறுபட்டுவிடும்.

நட்பும் தீ நட்பும்.

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்—யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

ஏனெனில் வஞ்சக நெஞ்சம் படைத்ததும் பலமிக்கதுமான யானையைக் காட்டிலும் எஜமான விசுவாசமிக்க குக்கலின், அறிவாளர்பே சாலச் சிறந்ததென சீலத்தில் மிக்க பெரியோரும் நாலடியில் சீலடியார் பதித்துள்ளார். ஆதலின் "நல்லிணக்க மல்ல தல்லற்படுத்தும்" என்ற ஆன்ருேர் வாக்கின்படி அற்ப சகவாசத்தினுல் பிராண சங்கடம் ஏற்படும். ஆதலால் "இணக்க மறிந்திணங்கல்வேண்டும்." பாம்புக்குப் பால் வார்த்தாலும் விஷத்தையே கொடுக்கும். ஆயினும் பாம்பின் விஷம் பல்லளவேயாகும். துற்சனருக்கோ அங்கமுழுதும் விடமாகும். ஆதலின் துற்சனரைக் கண்டால் தூர விலகு.

"பருவுக மாசற்ருர் கேண்மையொன் றீத்து
மொருவுக ஒப்பிலார் நட்பு."

(திருக்குறள் 326, செய்யுள் 200.)

மானிட வாழ்க்கைக்கு முக்கியமாய் இன்றியமையாப் பொருள்களில் நேயமும் ஒன்ருதலின் நம் பழக்கவழக்க ஒழுக்கங்களில் வழுக்கிலாவிதமாய் உண்மை நட்பாளனை ஒன்றி அடைதல் மேம்பாடுடைத்தது. அத்தகைய உண்மை நண்பனுல் உயர்ந்தார் பலருளரென்பது நம் நாட்டுப் புராதன சரித்திர சம்பந்தமாயும், ஆங்கில அறிவாளரின் அறமொழிகளாலும் தெள்ளென "உள்ளங்கை நெல்லியென" யாம் அறிந்திருத்தலோடும், அத்தகைய நட்பாளரின்றி போலி நட்பாளரால் கேடுகெட்டவர்கள் தற்காலத்தும் எத்தனை உளர் என்பதும் நாம் கண்கூடக் கண்ட விஷயமன்ருே! இதுபற்றியன்ருே யெவ்வமில் ஔவையும் "சேரிடமறிந்துசேர்" என்றனளாதலின் அதனுட்கருத்தை ஒவ்வொருவரும் ஆராய்ந்து அறிதல் கடன் என விரிக்காது சுருங்கக் கூறியுள்ளேன். ஆய்ந்தறிதல் அறிவோர் கடன்.

நட்பாராய்தல்:—நாம் சிநேகம் செய்ய விரும்பும் ஒருவரை ஓர் தீக்காரியத்தில் பிரவேசிக்கும்படி தூண்டவேண்டும். இரண்டாவது, தீங்கில்லாத சில அந்தரங்கங்களை அவனிடம் சொல்ல வேண்டும். பின்பு நாம் ஓர் ஆபத்தில் அகப்பட்டிருப்பதாக நடிக்கவேண்டும். இம்மூன்று பரீட்சைகளிலும் அவன் மெய்நட்

யாளனுயிருக்கும்பக்ஷத்தில், தீக்காரியத்தில் பிரவேசிக்காமல் தடுத்துக் கூறுவான். நமது அந்தரங்கங்களையும் வெளியிடான். 'ஆபத்திலறியலாம் அருமை நேசனை' என்றபடி நமக்கு வந்த ஆபத்தைத் தன்னுடையதென எவ்விதத்திலாவது நீக்க முயலு வான். இவனே சிறந்த நண்பன் என்று சகல ஜனங்களாலும் கொண்டாடப்படுவதுடன் இம்மையிலும் மறுமையிலும் கீர்த் தியை அடைகிறான்.

ஆனதினால் எவ்வாறு அன்னப்பக்ஷியிடம் நீரும் பாலும் கலந்துவைத்தால், பாலை உட்கொண்டு, நீரைப் பிரித்துவிடுகிற தோ, அதுபோல் எம்போன்ற மாணவர்களும், மற்றனைவோரும், நம்முடன் மத்திம, அதம நட்பாளர்கள் வந்து உறவாடினும் அவர்களை ஒழித்துவிட்டு உத்தம நட்பாளரைத் தேர்ந்தெடுக்க வேணுமாய்க் கோருகிறேன்.

A. K. SUBRAMANIAN,
R. C. Training School,
Trichinopoly.

துண்டுத் துணுக்குகள்.

சில நக்ஷத்திரங்களின் வெளிச்சம் இன்னும் பூமியை எட்ட வில்லையாம்.

பூமியைச் சுற்றிலுமுள்ள ஆகாயம் 2000 மைல் வரையில் வியாபித்திருக்கிறதாம்.

எண்பதுக்கதிகமான கிரகங்கள் வானத்தில் காணப்படுகின் றனவெனச் சொல்லப்படுகிறது.

ஆழமுள்ள கிணற்றில் இறங்கி வானத்தை நோக்குவோ மாயின் பகலில் நக்ஷத்திரங்களைக் காணலாம்.

பூதக்கண்ணாடியால் இரவில் வானத்தின் ஓர் பாகத்தை நோக்குவோமாயின், பகலில் ஒரு சிறிய துவாரத்தின் மூலம் ஒரு அறைக்குள் செல்லும் சூரிய வெளிச்சத்தில் தூசிகளைப் பார்ப்பது போல் ஏராளமான நக்ஷத்திரங்களைக் காணலாம்.

செவ்வாய் என்னும் கிரகத்தையும், வியாழனையும் தூரதிருஷ் டிக்கண்ணாடியால் பார்க்கும்போது, செவ்வாயில் உள்ள நிலம் பண்படுத்தப்பட்டிருப்பதுபோல் காணப்படுவதால் அதில் ஜனங் கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. வியாழனில் ஜனங்கள்

உலவுவதுபோலவும், கூப்பிடும் பாவனையாகவும் காணப்படுவதால், பூமிக்கும் வியாழனுக்கும் கூடிய சீக்கிரம் ஆகாயக்கப்பல்மூலம் சம்பந்தம் ஏற்படும்போலும்!

பூமியின் உஷ்ணப் பிரதேசங்களைவிட துருவப் பிரதேசங்கள் மெதுவாய்ச் சுழல்கின்றதாம்.

தோல் காதுள்ள பிராணிகளெல்லாம் குட்டி போடுகின்றன வென்றும், துளைக்காதுள்ள பிராணிகளெல்லாம் முட்டையிடுகின் றனவென்றுஞ் சொல்லப்படுகிறது.

மீசையுள்ள சிங்கம்போன்ற மிருகங்களெல்லாம் மாமிச பக்ஷணிகளாம். மீசையில்லாத குதிரை மாடுபோன்ற மிருகங்க ளெல்லாம் சாக பக்ஷணிகளாம்.

பச்சைப் பிள்ளைகளுக்கும் பக்ஷிகளுக்கும் கண்கள் தெளிவா யிருப்பதற்குக் காரணம், அவைகள் நினைத்த மாத்திரத்தில் மல ஜலங்களைக் கழித்துவிடுவதேயாம்.

இங்கிலீஷ் மாதங்களின் ஈற்றில் ரகர ஒற்றும், ரகர இகரமும் வரும் மாதங்கள் மானிடரின் சுகத்துக்கேற்றதில்லையாம். ஏன்?

செப்டெம்பர் துவக்கிவிட்டால் அவ்வருஷம் “பர் பர்” என்று வெகு துரிதத்தில் முடிந்துவிடுகிறதாம்.

சூ. ஆரோக்கியசாமி,
போர்டு பெண்பாடசாலை, மானாமதுரை.

கும்மி.

(மாணவச் சிறுமிகளுக்காக)

1. கும்மியடி பெண்காள் கும்மியடி யுடல்
குனிந்து நிமிர்ந்து கும்மியடி
நம்மைப் படைத்த இறைவன் பாதத்தை
நாடிக் கூடிக் கும்மியடி.

2. கன்னத்தில் நெற்றியில் மஞ்செண்ணெய் பூசுதல்
காலஞ் செல்லப் பழசாகுமடி
ஒன்னெரு மெச்சும் பெருமைக்குண மொழிந்
தோயாதடி முத்து மாதரசே.

3. கட்டழகான முகமதிலே பச்சைப்
பொட்டுகள் குத்தி மகிழ்வதினும்
திட்டமதாய்க்கிரு பைக்குறி தோன்றுதல்
திவ்வியமே முத்து மாதரசே.

4. காதிடங் கொள்ளாமல் பொத்தல் களிட்டுக்
கனக்க நகைபூட்டி வைப்பதிலும்
ஆதுலர் கெஞ்சலைக் கேட்டுங் குணமதை
அணிவ தழகடி மாதரசே.

5. முன்வாய்ப் பல்லில் துவாரமிட்டுத் தங்க
முருக்கி யூற்றி ஜொலிப்பதிலும்
பொன்போல் மின்னும் மதுர வசனம்
பொழியடியோ முத்து மாதரசே.

6. சம்பிரம தாம்பூலங்கள் போட்டு நாவைத்
தக்க சிவப்பேற்றப் பார்ப்பதிலும்
தம்பட்டக் கோல்போ லடித்திடும் நாவைத்
தறித் தெறிவாயடி மாதரசே.

7. தண்டை சதங்கை சரப்பணியும் பட்டு
தாவணியும் அதன் மேலணியும்
கொண்டைப்பூ மூக்குத்தி மேலென்றும் பேராசை
கொள்ளாதடி முத்து மாதரசே.

8. பட்டுப் பாவாடையும் பொட்டு ரவிக்கையும்
பல்வர்ணச் சேலைதனை யுடுத்தி
பொத்துப் புழுத்தள்ளும் தேகத்தைத் தெய்வமாய்ப்
போற்றுதடி முத்து மாதரசே.

9. பட்டு மழிந்திடும் பொட்டு மழிந்திடும்
பாழுடல் தானு மழிந்து விடும்
திட்ட நடையும் மெய்த் தெய்வ பயமென்றும்
தேய்ந்தழியாதடி மாதரசே.

10. வேலையாங் கைவளை மாட்டடியோ
விவேகமாம் மூக்குத்தி பூட்டடியோ
சோலைக் குயில்மொழி பேசடியோ இது
சுந்தரந்தான் முத்து மாதரசே.

ஆவணக் காப்பக
182281

11. கற்பென்னும் பட்டை உடுத்தடியோ நாணக்
காதணி தன்னை அணியடியோ
நற்புத்தி என்னுஞ் சரப்பணி போடுதல்
நல்லழகே முத்து மாதரசே.

12. சிறக்க மோதிரங்கள் போட்டுக் கையைச்
சிங்காரமாகவே வைப்பதிலும்
அறப்பிசினித் தனம் செய்யுங் கையை
அறுத் தெறிவாயடி மாதரசே.

13. மிஞ்சிகளோடு பொன் வெள்ளிக் கொலுசுகள்
மேலும் அணிந்து நடப்பதுடன்
அஞ்சாது வேலைக்குச் சாய்ந்திடுங் கால்கள்
அழகில் அழகடி மாதரசே.

14. அத்தர்கள் பன்னீர் பரிமள வாசனை
அன்றைக் கடுத்தவர்க்கே மணக்கும்
புத்தி நற்புத்தி இப்பூமி முழுதும் எப்
போது மணக்குமே மாதரசே.

15. கீழ்ப்படிதல் பெரிய கல்வியுடல்
ஆள் கொள்ளுதல் அறிய கல்வி
நாளொரு தினம் நல்ல நடக்கையில்
நடந்து சாதிப்பாய் மாதரசே.

16. உள்ளழகோடு புறத்தழகுங் கூடி
ஒன்றித் திருத்தல் அரிதாகும்
துல்லிப மாயிவை ரண்டும் பொருந்திடச்
சுந்தர மாமடி மாதரசே.

17. மன்னன் மகிழ உனைச்சோடி உந்தன்
மாமி மகிழவே தாழ்மை யணி
சின்ன மகலக் கடுமொழி சொல் உனைத்
தேசம் புகழுமே மாதரசே.

சூ. ஆரோக்கியசாமி,
போர்டு பெண்பாடசாலை, மானாமதுரை.

சம்பாஷணை.

பாலர்கள் துதிசெய்தல்.

(எமைக் கண்பார்த்திடுவாய் என்ற மெட்டு)

நாவில் வந்திருப்பாயே—நசரையா
நாவில் வந்திருப்பாயே—நசரையா.
மேவிய பாலர் விரும்பியேபாட—காவலாய்
வந்தருள்வாய் நசரையா—காவலாய்
வந்தருள்வாய் (நாவில்.)
நடிக்கின்ற இந்நாடகம் நலமுடன்புகழ்பெற—காவலாய்
வந்தருள்வாய் நசரையா—காவலாய்
வந்தருள்வாய் (நாவில்.)

(இருவரும் மறைதல்.)

சந்நியாசி:—(அரண்மனையிலுள்ள சிங்கார ஜோடினையைப் பார்த்துவிட்டு களைத்துப்போய் நித்திரைக்குப் போகும்போது)

பாடல்.

காட்டில் பலகாலம் வசித்து—இப்போ
நாட்டையடைந்து நல் நகரம் கண்டேன்யான்.
மோட்சலோகத்துக்கு ஒப்பானேன்—மிக்க
காட்சிகளைக்கண்டு களைப்புமே கொண்டேன்.
சற்று இளைப்பாறியிருக்க—இந்த
சத்திரத்தில் போய் நான் படுத்திருப்பேனே.
தந்தின தனதானம் தானம்—தன
தந்தின தனதன தனதன தானம்—தந்தின
தனந்தானம் தானம்

(என்று பாடியபின்பு அரண்மனையில் படுத்து நித்திரை செய்தல்.)

அரசன் வருகை:—சேவகா, நமது மந்திரியை அழைத்து வா.

சேவகன்:—அப்படியே செய்கிறேன், மஹாராஜ்.

(மந்திரி வருதலும், அரசனும் மந்திரியும் நந்தவனத்தைச் சுற்றிவந்து பாடுதல்.)

இந்தவனச் சிங்காரம்—என்ன சொல்லுவேன் நான்
இந்தவனச் சிங்காரம்.

1. பன்னிரு மாதுளை படர்ந்த செந்தாமரை
நன்னய மிகுந்த ரோஜா நாம் காண்கிறோமே (இந்தவன.)
2. புல்பூண்டு விருக்ஷம் புகழ்ந்த செடிகொடி
நறுமலர் கொடி ரோஜா நலமுடன் தோன்றுதே (இந்தவன.)
3. காட்டு மிருகங்கள் நாட்டு மிருகங்கள்
கடவுளின் கிருபையால் கடகடவொலிக்குதே (இந்தவன.)

அரசன் :—மந்திரி, எனக்கு களைப்பு உண்டாகிறபடியால், யான் துயிலச்செல்கின்றேன். நீ அரண்மனையைச் சுற்றிப்பார்த்து வருக.

மந்திரி :—அப்படியே செய்கிறேன், அரசே.

(அரசன் போகுதல். பின்பு மந்திரி அரண்மனையைச் சுற்றிப் பார்த்துவிட்டு அங்குள்ள சந்நியாசியிடம் போகுதல்.)

பாட்டு.

மந்திரி :—யாரையா நீர் இங்கு வரலாமா?
இது அரசன் மாளிகை என்று
அறியாமல் போனதென்ன? (யாரையா.)

வசனம்.

சந்நியாசி :—ஐயா! நான் காட்டிலேயே பலகாலும் வசித்து இப்போது இங்குள்ள காட்சிகளைப் பார்த்துவிட்டு, களைப்பினால் இதைச் சத்திரம் என்று எண்ணி, நித்திரைசெய்தேன், மஹாராஜ்.

பாட்டு.

மந்திரி :—சத்திரமாக விருந்தால்
சகலரும் தங்கியிருப்பார்
புத்தியில்லா சந்நியாசியே
புறப்படு இக்கணமே.

வசனம்.

மந்திரி :—சத்திரத்தில் யாரும் தங்கியிருப்பார். ஆகையினாலே, அரண்மனைக்கும் சத்திரத்துக்குமுள்ள வித்தியாசம் உனக்குத் தெரியவில்லையா? என்ன மூடத்தனம்!

(இதற்குள் அரசன் வருதல்.)

பாட்டு.

அரசன் :—என் நேச மந்திரி
இந்த மனிதன் யார்—இங்கு வந்த காரணம்
சொல், சொல், சொல்.

வசனம்.

மந்திரி :—மஹாராஜ்! இவன் ஒரு சந்நியாசியாம். இப்போது இவன் இங்கு வந்து களைப்பினால் இந்த அரண்மனையைச் சத்திரமென்று எண்ணி படுத்துக்கொண்டு, போகமாட்டேன் என்கிறான்.

அரசன் கோபத்தோடு பாடல்.

யாரடா நீ இங்கு வரலாமோ
இது அரசன் மாளிகை என்று
இது அரசன் மாளிகை என்று
அறியாமல் போனதென்ன? (யார்டா.)

வசனம்.

அரசன் :—சத்திரத்திற்கும், அரண்மனைக்குமுள்ள பேதம் தெரியாதா, மூடா.

பாடல்.

சத்திரங்கள் இதைப்போல விஸ்தீரமாய்
கட்டியிருக்க ஜெகத்திலும்—நீ
கண்டதுண்டோ—புத்தியில்லா
சந்நியாசியே புறப்படு இக்கணமே
பிடித்துத் தள்வேன் முன்னே. (யாரடா.)

சந்நியாசி பாடல்.

ஐயா மஹாராஜாவே—ஓர்
விஷயம் கேட்கவேண்டும்
தயவுசெய்து உத்தரவு
அருளவேண்டுமே.

வசனம்.

சந்நியாசி :—ஐயா! நான் உம்மிடம் ஓர் விஷயம் பெற ஆவலுற்றிருக்கிறேன். தயைகூறவேண்டும்.

அரசன் :—என்ன உத்தரவு, மூடா? சொல், பார்ப்போம்.

சந்நியாசி :—இந்த அரண்மனையைக் கட்டியது யார்?

அரசன் :—என் முன்னோர்கள்.

சந்நியாசி :—அதில் அப்போது வசித்தவர் யாவர்?

அரசன் :—எனது பாட்டன் பூட்டன்மார்கள்தான்.

சந்நியாசி :—இப்போது வசிப்பவர் யார்?

அரசன் :—நான்தான். அதற்கென்ன?

சந்நியாசி :—இனிமேல் வசிப்பவர் யார்?

அரசன் :—எனது புத்திர பௌத்திரர்கள்.

சந்நியாசி :—இதிலேயும் ஒவ்வொருவராய்த்தானே வசித்து செல்கின்றனர்? நிலைகொண்டவர் ஒருவருமில்லையே? அப்படியிருக்கும்போது, அரண்மனைக்கும் சத்திரத்திற்கும் என்ன பேதம்? இந்நிலவுலகில் எவை நிலைமையுள்ளவையாகத் தெரிகிறது?

வசனம்.

அரசன் :—குருவே! அறியாமல் பேசிய என் தூஷண வார்த்தைகளைப் பொறுத்துக்கொள்ள மன்னிப்பு கேட்கிறேன்.

சந்நியாசி :—அரசே! எதையும் ஆலோசித்தே செய்தல் வேண்டும். இவ்வுலகம் நிலைமையற்றது.

சந்நியாசி பாடல்.

1. உலகமும் சதமென்று எண்ணியிராதே—பலவித
பாதாள வலையில் சிக்காதே
உலகமும் சதமல்ல.
2. மாதா பிதா மற்றும் செல்வமிருந்தாலும்—மரணம்
வந்து உந்தன் வாழ்வைக் குலைக்கும்
உலகமும் சதமல்ல.
3. நரகத்தின் புழுக்களும் நெருப்புமட்டுமல்ல—பரலோக
கீதங்கள் உன்னை வதைக்கும்
உலகமும் சதமல்ல.

வசனம் :—அரசே! இனிமேல்பட உலகின்மேல் சதா அன்பை வைத்து உமது ஆத்மாவைக் கறைப்படுத்தாமல் புண்ணியசீலராய் செங்கோல் செலுத்தி அரசாள்வீராக! வந்தனம்.

(யாவரும் மறைந்து ஆட்டம் முடித்தல்).

விடுகதை வினு.

முள்ளு முனையில் 300 பட்டணம். பட்டணம் ஆளவந்த இராஜா முடிசிறுத்த ராஜா. முடிசிறுத்த இராஜா மனைவி இடை சிறுத்தவள். குளம் கரையில்லா குளம். அக்குளத்திலே தூறு இல்லாத புல். அப்புல்லை மேயவந்த மான் காலில்லாத மான். காலில்லாத மானை எய்யவந்த வேடன் அம்பில்லாத வேடன். அவன் மானைக் கொல்லாமல் மான் வயிற்றிலிருந்த குட்டியைக் கொன்றுவிட்டான். இக்கதையின் பொருள் உரைமின்.

ஜ241,N11PP
N29 18 4

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக நூலகம்
18228
சென்னை-600 008

PERMISSU SUPERIORUM.
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1929.